# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.42/மா/2025
நாள் 11.09.2025

திரு. M. விஜயன் — முறையீட்டு மனுதாரர்
சென்னை

மண்டல அலுவலர் — எதிர் மனுதாரர்
மண்டலம் 9
பெருநகர சென்னை மாநகராட்சி

சென்னை, தண்டையார்பேட்டை, கருணாநிதி நகர், 4வது தெரு, கதவு எண் 03/13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் என்பவரின் 22.12.2024 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 24.12.2024 அன்று பெறப்பட்டு 42/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, தண்டையார்பேட்டை, கருணாநிதி நகர், 4வது தெரு, கதவு எண் 03/13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M. விஜயன் என்பவர் தனது 22.12.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்துக் கொண்டு சென்னை மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். சென்னை 34, நுங்கம்பாக்கம், மண்டலம் 9, வார்டு 113, பகுதிக்கு உட்பட்ட அண்ணா சாலை, ஜெமினி மேம்பாலம் கீழ்பகுதியில் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் Jhaveer Plaza Complex என்ற தனியார் இடத்தில் (போலீஸ் பூத் மற்றும் டிராபிக் சிக்னல் அருகில்) தரைமட்டத்திலிருந்து சுமார் 50 அடி உயரத்தில் சாலைக்கு ஓரமாக அனுமதியற்ற/விதிமீறல் விளம்பர பேனர் அபாயகரமாக அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் பொது இடங்கள் மற்றும் தனிநபர் கட்டிடங்களில் விளம்பர பதாகைகள், விளம்பர பலகைகள் வைக்க தடை உள்ளது. அதே நேரம் 2023ல் கொண்டு வரப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி விதியில் அனுமதி பெற்று விளம்பர பதாகைகள்/பலகைகள் அமைக்கலாம், எனினும் மேற்கண்ட இடத்தில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலான வகையில் வைப்பது விதி மீறிய செயலாகும்.

2. சமீபத்தில் சில மாதங்களுக்கு முன்பு மும்பையில் ஏற்பட்ட புயல் காரணமாக விதிகளை மீறி வைக்கப்பட்ட பெரிய பேனர் சரிந்து விழுந்து பதினான்கு பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் நடைபெற்ற பிறகும் சென்னை பெருநகர மாநகராட்சி

அதிகாரிகள் அனுமதியற்ற மற்றும் விதிமீறல் விளம்பர பதாகைகள்/பலகைகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறார்கள். மேற்கண்ட சாலையில் வைக்கப்பட்ட விளம்பர பேனர் சரிந்து விழுந்தால் சாலையில் செல்வோருக்கு தான் பாதிப்பு ஏற்படும். ஐரோப்பா உள்ளிட்ட சில நாடுகளில் பாரம்பரிய அழகை மறைக்கும் என கருதுவதால் விளம்பர பதாகைகள்/பலகைகள் வைக்க அனுமதி கிடையாது. சென்னையிலும் பாரம்பரிய மற்றும் புராதன தன்மையுடன் கூடிய கட்டடங்களை மறைக்கும் வகையில் புது கட்டுமான திட்டங்களையே செயல்படுத்தக்கூடாது என சட்டவிதிகள் உள்ளன. குறிப்பிட்ட தொலைவிற்கு புது கட்டடங்கள் கட்டுவதற்கே பல்வேறு கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதை துளியும் கருத்தில் கொள்ளாமல் தனியார் நிறுவனங்கள் விதிகளை மீறி விளம்பர பதாகைகள்/பலகைகள் வைக்கின்றன.

3. விளம்பர பதாகைகள் / பலகைகள் தொடர்பாக உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற உத்தரவுகளை காற்றில் பறக்க விட்டு பேனர் கலாச்சாரம் தலை தூக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், மழைக்காலங்களில் மட்டுமன்றி பொதுவாகவே அப்பாவி மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக உள்ளது. மேற்கண்ட நுங்கம்பாகம் நெடுஞ்சாலையில் உள்ள அனுமதியற்ற விதிமீறல் விளம்பர பேனரை அகற்ற சென்னை பெருநகர மாநகராட்சி இணையதளம் வழியாக கடந்த 20.06.2024 மற்றும் 12.09.2024 ஆகிய தேதிகளில் புகார் அனுப்பியிருந்தேன். அதற்கான மாநகராட்சி அதிகாரிகள் அனுப்பிய பதிலில் மேற்கண்ட விளம்பர பேனர் அகற்றப்பட்டு விட்டதாக பொய்யாக பதில் அளித்துள்ளார்கள். தற்போது வரை புகாரில் தெரிவித்த விளம்பர பேனர் அதே இடத்தில் தான் உள்ளது.

4. எனவே, மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் பொது நலனுடன் தாக்கல் செய்யப்பட்ட இந்த புகாரினை விசாரணை செய்து சென்னை 34, நுங்கம்பாக்கம், மண்டலம் 9, வார்டு 113, பகுதிக்கு உட்பட்ட அண்ணா சாலை, ஜெமினி மேம்பாலம் கீழ்பகுதியில், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் Jhaveer Plaza Complex என்ற தனியார் இடத்தில் வைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற/விதி மீறல் விளம்பர பலகையினை முற்றிலுமாக அகற்றி மீண்டும் இதேபோல் வைக்காமல் தொடர் கண்காணிப்பில் ஈடுபட தொடர்புடைய சென்னை பெருநகர மாநகராட்சி அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று இம்முறைமன்றத்தை நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 19.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9—ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9—ன் மண்டல அலுவலர் தனது 01.08.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

"மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட புகார் குறித்து தெரிவிப்பது யாதெனில், மண்டலம் 9, பகுதி, 26, கோட்டம் 113, பகுதிக்குட்பட்ட அண்ணா சாலை ஜெமினி மேம்பாலம் கீழ்பகுதியில் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் Jhaveer Plaza Complex என்ற தனியார் இடத்தில் (போலீஸ் பூத் மற்றும் டிராபிக் சிக்னல் அருகில்) அனுமதியற்ற / விதிமீறல் விளம்பர பேனர் 31.07.2025 அன்று அகற்றப்பட்டது என்பதினை தெரிவித்துக் கொள்கிறோம்." என தெரிவித்துள்ளார்.

5. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 20.08.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.08.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 20.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்துக் கொண்டு சென்னை மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். சென்னை 34, நுங்கம்பாக்கம், மண்டலம் 9, வார்டு 113, பகுதிக்கு உட்பட்ட அண்ணா சாலை, ஜெமினி மேம்பாலம் கீழ்பகுதியில் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் Jhaveer Plaza Complex என்ற தனியார் இடத்தில் (போலீஸ் பூத் மற்றும் டிராபிக் சிக்னல் அருகில்) தரைமட்டத்திலிருந்து சுமார் 50 அடி உயரத்தில் சாலைக்கு ஓரமாக அனுமதியற்ற/விதிமீறல் விளம்பர பேனர் அபாயகரமாக அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் பொது இடங்கள் மற்றும் தனிநபர் கட்டிடங்களில் விளம்பர பதாகைகள், விளம்பர பலகைகள் வைக்க தடை உள்ளது. அதே நேரம் 2023ல் கொண்டு வரப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி விதியில் அனுமதி பெற்று விளம்பர பதாகைகள்/பலகைகள் அமைக்கலாம். ஆனால் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலான வகையில் வைப்பது விதி மீறிய செயலாகும்.

மேற்கண்ட நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள அனுமதியற்ற விதிமீறல் விளம்பர பேனரை அகற்ற கடந்த 20.06.2024 மற்றும் 12.09.2024 ஆகிய தேதிகளில் புகார் அனுப்பியிருந்தேன். அதற்கு மாநகராட்சி அதிகாரிகள் மேற்கண்ட விளம்பர பேனர் அகற்றப்பட்டு விட்டதாக பதில் அளித்துள்ளார்கள். ஆனால், பேனர் மட்டும் அகற்றப்பட்டுள்ளது. பேனர் வைக்கப்பட்ட இரும்பு தூண் இன்று வரை அதே இடத்தில் தான் உள்ளது.

எனவே, சென்னை 34, நுங்கம்பாக்கம், மண்டலம் 9, வார்டு 113, பகுதிக்கு உட்பட்ட அண்ணா சாலை, ஜெமினி மேம்பாலம் கீழ்பகுதியில், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் Jhaveer Plaza Complex என்ற தனியார் இடத்தில் வைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற/விதிமீறல் விளம்பர பலகையினை முற்றிலுமாக அகற்றிடவும், மீண்டும் விளம்பரம் பலகைகள் அமைப்பதை தடுக்கும் வகையில் சென்னை பெருநகர மாநகராட்சி அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுமென்று இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

7. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் 20.08.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் குறிப்பிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, பகுதிக்குட்பட்ட அண்ணா சாலை ஜெமினி மேம்பாலம் கீழ்பகுதியில் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் Jhaveer Plaza Complex என்ற தனியார் இடத்தில் (போலீஸ் பூத் மற்றும் டிராபிக் சிக்னல் அருகில்) அனுமதியில்லாமல் விதிமீறி வைக்கப்பட்டிருந்த விளம்பர பேனர் 31.07.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அகற்றப்பட்டது. ஆனால் பேனர் வைக்கப்பட்டிருந்த இரும்பு தூண் அதிக

பளுவுள்ள காரணத்தினால் அதனை கிரேன் வைத்து தான் அகற்ற இயலும். எனவே, அதிக பளுவுள்ள இரும்பு தூணை விரைவில் அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.''

8. மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

சென்னை 34, நுங்கம்பாக்கம், மண்டலம் 9, வார்டு 113, பகுதிக்கு உட்பட்ட அண்ணா சாலை, ஜெமினி மேம்பாலம் கீழ்பகுதியில் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் Jhaveer Plaza Complex என்ற தனியார் இடத்தில் (போலீஸ் பூத் மற்றும் டிராபிக் சிக்னல் அருகில்) தரைமட்டத்திலிருந்து சுமார் 50 அடி உயரத்தில் சாலைக்கு ஓரமாக அனுமதியற்ற/விதிமீறல் விளம்பர பேனர் அபாயகரமாக அமைக்கப்பட்டுள்ளது என்பதும், தமிழகத்தில் பொது இடங்கள் மற்றம் தனிநபர் கட்டிடங்களில் விளம்பர பதாகைகள், விளம்பர பலகைகள் வைக்க தடை உள்ளது என்பதும், 2023ல் கொண்டு வரப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகளில் அனுமதி பெற்று விளம்பர பதாகைகள்/பலகைகள் அமைக்கலாம் என்பதும், ஆனால் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலான வகையில் வைப்பது விதி மீறிய செயலாகும் என்பதும், மேற்கண்ட அனுமதியற்ற/விதி மீறி அமைக்கப்பட்ட பேனரை மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சியால் அகற்றப்பட்டு, அந்த பேனர் வைக்கப்பட்ட இரும்பு தூண் இன்று வரை அகற்றப்படாமல் அதே இடத்தில் உள்ளதால், விளம்பர பலகையினை முற்றிலுமாக அகற்றிடவும், இது போல் விளம்பரப் பலகைகள் மீண்டும் அமைப்பதை தடுக்கும் வகையில் சென்னை பெருநகர மாநகராட்சி அதிகாரிகளுக்கு உரிய உத்தரவுகள் பிறப்பிக்குமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, பகுதிக்குட்பட்ட அண்ணா சாலை ஜெமினி மேம்பாலம் கீழ்பகுதியில் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் Jhaveer Plaza Complex என்ற தனியார் இடத்தில் (போலீஸ் பூத் மற்றும் டிராபிக் சிக்னல் அருகில்) அனுமதியில்லாமல் விதிமீறி வைக்கப்பட்டிருந்த விளம்பர பேனர் 31.07.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அகற்றப்பட்டது என்பதும், ஆனால் பேனர் வைக்கப்பட்டிருந்த இரும்பு தூண் அதிக பளுவுள்ள காரணத்தினால் அதனை கிரேன் வைத்து தான் அகற்ற இயலும் என்பதும், மேற்கண்ட இரும்பு தூணை விரைவில் அகற்ற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, பகுதிக்குட்பட்ட அண்ணா சாலை ஜெமினி மேம்பாலம் கீழ்பகுதியில் நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் Jhaveer Plaza Complex என்ற தனியார் இடத்தில் (போலீஸ் பூத் மற்றும் டிராபிக் சிக்னல் அருகில்) அனுமதியில்லாமல் விதிமீறி வைக்கப்பட்டிருந்த விளம்பர பேனர் மட்டும் 31.07.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் அகற்றப்பட்டாலும், பேனர் வைக்கப்பட்டிருந்த இரும்பு தூண் அதிக பளுவுள்ள காரணத்தினால் அதனை கிரேன் மூலம் அகற்ற இயலும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளரின்

வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், வடகிழக்கு பருவ மழை காலம் தொடங்குவதற்கு முன்பே பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் மேற்கண்ட பேனர் வைக்கப்பட்டிருந்த இரும்பு தூணையும் விரைவாக அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. M. விஜயன்,
வழக்கறிஞர்,
கதவு எண் 03/13,
கருணாநிதி நகர்,
தண்டையார்பேட்டை
சென்னை–600 081.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 9,
4, லேக் ஏரியா 4வது குறுக்கு தெரு,
பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை–600 034.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.